10 JAN 1931

நவமணி.

எல்லாம் தெய்வச் செயல்

உள் நாடு ரூ 1 | வெளி நாடு ரூ 1½

ஆசிரியன் [illegible] இராமநாதன்

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR. RAMNAD DT.

Vol. I. பிரமோதூத, கார்த்திகை-மீ No 11.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள் வணக்கம்.	261
2.	ஸ்தலமஞ்சரி:— பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்.	263
3.	சர்வகக்ஷிமஹாநாடு:— (தலையங்கம்) பத்திராதிபர்.	265
4.	மணிமொழி:— (குறிப்பு) பத்திராதிபர்.	270
5.	ஆந்திரநாடு:— கோவை திரு. சி. கு. நா. அவர்கள்.	273
6.	சிக்கனம்:— திரு. ச. தா. பா. அவர்கள்.	277
7.	பூகம்பங்கள் செய்தவேலை.	281
8.	தேசிய சுகம்:— திரு. அரு. சோமசுந்தரன் அவர்கள்.	284
9.	கனகவல்லி அல்லது கள்வர்கவர்ந்த கன்னிகை:— கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.	286
10.	விகடத்துணுக்குகள்.	290
11.	மின்மினி.	292
12.	மதிப்புரை.	294
13.	நாற்றிசை நடப்பு.	295
	அநுபந்தம்:— திவா[illegible]ஹதூர். அமு. மு. முருகப்ப செட்டியாரவர்கள் படம்.	

உயர்ந்த வேலை! குறைந்த கூலி!!

எங்கள் அச்சுக்கூடத்தி[illegible]ச்சுவேலைகளும் உயர்ந்தமுறையில் பலகலர்[illegible]லும் குறித்த காலத்திலும் செய்துகொடுக்கப்படும். ஒவ்[illegible]ம் வேலையின் திறமையை வந்து பரீக்ஷிக்க வேண்டுகிறோம்.

மானேஜர்.

வேதாம்பாள் அச்சுக்கூடம்,

பள்ளத்தூர்.

‘நவமணி’ அநுபந்தம்.

திவான்பஹதூர்

அமு. மு. முருகப்பசெட்டியார் அவர்கள்

1931-ம் ஆண்டின்

சென்னை (பட்டினத் தலைவர்) ஷேரீப்.

கடவுள் வணக்கம்.

தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத் தனதான.

அந்தகன் வருந்தினம் பிறகிடச்
சந்தத மும்வந்துகண் டரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள

அந்திபக லென்றிரண் டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புயப தங்களின் பெருமையைக் கவிபாடிச்

செந்திலை உணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை அறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெறு குந்தடந் தெளிதரத் தணியாத

சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்
சிந்தைவ ரஎன்றுநின் தெரிசனைப் படுவேனோ

கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறஅரக் கருமாளக்

குன்றிடி யவம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்

தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான

சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன தனதான.

அனிச்சங் கார்முகம் வீசிட மாசறு
துகட்பஞ் சானத டாகம்வி டாமட
அனத்தின் தூவிகு லாவிய சீறடி மடமானார்

அருக்கன் போலொளி வீசிய மாமர
கதப்பைம் பூணணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாவியை ஆவி இடேறிட நெறிபாரா

வினைச்சண் டாளனை வீணனை நீணிதி
தனைக்கண் டாணவ மானகிர் மூடனை
விடக்கன் பாய்நுகர் பாழனை யோர்மொழி பகராதே

விகற்பங் கூறிடு மோக விகாரனை
அறத்தின் பாலொழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனோ

முனைச்சங் கோலிடு நீலம கோததி
அடைத்தஞ் சாதஇ ராவண னீள்பல
முடிக்கண் றோர்கணை ஏவுமி ராகவன் மருகோனே

முளைக்குஞ் சீதநி லாவொட ராவிரி
திரைக்கங் காநதி தாதகி கூவிள
முடிக்குஞ் சேகரர் பேரரு ளால்வரு முருகேனே

தினைச்செங் கானக வேடுவ ராணவர்
திகைத்தந் தோவென வே கணி யாகிய
திறற்கந் தாவளி நாயகி காமுறும் எழில்வேலா

திறக்குந் தாமரை யோடையில் மேடையில்
நிறக்குஞ் சூல்வளை பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரர் பெருமாளே.

ஸ்தல மஞ்சரி.

ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்.

(சென்றமாதத் தொடர்ச்சி.)

காந்திமதி யம்மை.

காந்திமதித் தாயே கடையேனை நின்னருளா
லேந்திமதியிலகி யின்பநிலை—வாய்ந்திடவே
கண்ணருள்செய் துள்ளிரங்கக் கைதலைகொண் டேத்தினேன்
வண்ணமணித் தாட்டாமரை. 81

குற்றால நாதர்.

கற்றாலும் படித்தாலும் பிறர்வியப்பக் கரைந்தாலும்
கருத்தா லோர்கால்
குற்றாலா குறும்பலவா குழன்மொழிநா யகிக்கினிய
குழகா வென்று
சொற்றாலே யன்றியவர் சுரர்க்கதிக ராணாலுஞ்
சுகவா னந்தம்
உற்றாராப் பேரின்ப வுயரருவி திலைப்பாரோ
வுலகின் மீதே. 82

திருச்செந்தூர்.

பொறியிற் படுதுயரம் போலெமக்குப் போந்த
நெறியிற் படுதுயர நீக்கித்—திறமுறுசீர்த்
தண்டைக்கா லெந்தம் தலைமேற் புனையவருள்
கொண்டக்கா லென்றோ குறை. 83

செந்திநகர் வாழுஞ் சிவகுருவே நின்றனது
சுந்தரஞ்சேர் பொன்னடியான் சூடுதற்கே—வந்தடைந்தேன்

பீழைமிகா தெந்தம் பிழைபொறுத்து நின்னருகில்
வாழியருள் செய்வாய் வர. 84

பாண்டியனார் தஞ்செல்வப் பாவை பரிமுகநீத்
தேண்டிகழு நன்முகமன் றீந்தருளும்—ஆண்டகையே
என்றன் பவமுகமும் போக்கி யினிதருளல்
உன்றற் கரிதோ வுரை. 85

விண்களிப்பச் சூர்தடிந்த வெற்றிவடி வேலோயென்
கண்களிப்ப நின்கோலங் கண்டுகொண்டேன்—மண்களிப்பப்
பாய்கடலார் செந்திற் பதியதனில் மீட்டுமொரு
தாய்குடலிற் சேரா வகை. 86

திருச்சோ புரம்.

கண்டேன்வேற் கண்ணியைமுக் கண்ணனெடுஞ் சோபுரத்தில்
விண்டே னறுபகையும் வியவே—உண்டேன்
அருளமுதந் தன்னை யயன்கரஞ்சோராமல்
வெருளநமன் றானு மெலிந்து. 87

பிறவிப் பெருங்கடலைப் பின்கடத்து மாநீர்
நெறியைக் கடத்தியருள் நேரும்—செறிய வொரு
பங்கமரும் வேனெடுங்கட் பாவையொடுஞ் சோபுரம்வாழ்
மங்களபு ரீச மணி. 88

சுவாமி மலை.

தாரகத்தின் பொருளதனைத் தாரகத்தின்
பொருளானன் றனக்கே யோதி
யேரகத்தி லமர்குருவே நின்றிரு நீற்
றபிடேகத் தெழில்நேர் நோக்கிப்
பாரகத்தி லேன்பிறந்தே னேன்பிறந்தே
னெனமதிக்கும் பரிசி னேனும்
ஓரகத்தி லுவந்திட்டே னனந்த வுவரிகுளித்
தோங்கி னேனல். 89

(தொடரும்.)

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவ மணி:'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்.]
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்.]

மாலை 1. } பள்ளத்தூர்பிரமோதூதகார்த்திகை { மணி 11.

சர்வகக்ஷி மஹாநாடு.

எதிர்பார்த்ததுபோல் நவம்பர் 12-உ சர்வகக்ஷி மஹாநாட்டை லண்டனில் மன்னர் பிரான் திறந்துவைத்துவிட்டார். இந்தியப் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் கக்ஷிப் பிரதிநிதிகளும் அம்மஹாநாட்டின் தலைவரான பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் அதில் பேசியாயிற்று. இத்துடன் அதன் முதல் அத்தியாயம் முடிவடைகிறது. இதில் பேசிய இந்தியப் பிரதிநிதிகள் யாவரும் ஒற்றுமையோடு இந்தியாவிற்கு ஐக்கிய அரசாங்கம். அதாவது சுதந்தரமுள்ள கூட்டு அரசாங்கம் வேண்டும் என ஒரே மனதாய் அறிவித்துவிட்டார்கள். இதில் முன்னர் வேறுபட்டிருந்த ஸ்ரீநிவாஸ ஸாஸ்திரியார் கூடத் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு இதற்கு சாதகமாக அபிப்பிராயப்பட்டு விட்டதுமோர் நன்மைக்கென்றே கூறவேண்டும். இதில் சுதேச சமஸ்தானாதிபதிகள் மாறுபடுவரென்று எதிர்பார்த்த பலருக்கும் திகைப்புண்டாகும்படி அவர்களும் ஐக்கியப்பட்ட அபிப்பிராயமே கொடுத்து

விட்டனர். சிறு பான்மையோர் பிரதிநிதிகளும் முஸ்லீம் பிரதிநிதிகளுங்கூட இதை ஒப்புக்கொண்டுவிட்டனர்.

இந்நிலையில் இந்தியாவில் எத்தனை ஜாதிபேதங்கள், மதபேதங்கள், அரசியல் வேற்றுமைகள் விளங்கினும் எங்களுக்குள் ஓர் வரையறுத்த சுதந்தரத்தை உண்டுசெய்துவிட்டால் நாங்கள் சகோதரபாவத்துடன் விட்டுக்கொடுத்து எங்கள் நாட்டைக் காக்கும் முறையை நாங்களே நிறுவிக்கொள்ளுகிறோம். நீங்கள் எங்கள் சச்சரவுகளை ஓர் சாக்காகக்கொண்டு அதனால் தான் நாங்கள் உங்களுக்கு சீர்திருத்தம் வழங்க இயலவில்லை என்ற பேச்சை இனி நிறுத்துங்கள் என, பிரிட்டிஷாருக்கு எடுத்துரைப்பது போன்று, இந்தியப் பிரதிநிதிகள் யாவரும் ஒருங்கே கூறிமுடித்த பின்னர், அங்குபேசிய பிரிட்டிஷ் கக்ஷிப்பிரதிநிதிகளும், மாஜிஇந்திய அரசாங்க நிர்வாகத்தலைவரும் அதைக்கண்டு வெருண்டவர்கள் போன்று உங்களுக்கு சீர்திருத்தம் வழங்கவே நாங்களும் இங்கு கூடியுள்ளோம்; ஆனால், உடனேயோ அல்லது சீக்கிரத்திலோ நீங்கள் விரும்பும் அவ்வளவு சுதந்தரம் கொடுக்கப்படும் என்ற ஞாபகத்தை விட்டுவிடுங்கள்; ஏதோ கொஞ்சம் பார்ப்போம்; எனக் கூறுவதைப் போல் பேசிமுடித்தனர். அதன்னியில் நீங்கள் கூறுகிறபடி உடனே சுதந்தர ஐக்கிய அரசாங்கம் இந்தியாவிற்கு வேண்டுமென்ற தீர்மானத்தைச் செய்வீர்களே யானால், அது இம்மஹாநாட்டின் தலைவருள்பட யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட போதிலும், எங்கள் பார்லிமெண்ட் சபை அதை நிராகரிக்கவே செய்யும், என்ற கொள்கையில் லார்டு ரீடிங் பிரபுவும் தெளிவாகச் சொல்லிவிட்டார். இதற்குமேல் பேசிய மஹாநாட்டுத் தலைவரின் பேச்சு மிக்க அழகாகவும் சாமர்த்தியமாகவுமே இருந்ததன்றி, நீங்கள் விரும்பும் ஐக்கிய அரசியலை நாங்கள் வழங்குவோமென்றோ, அன்றி வழங்க முயற்சிப்போ மென்றோ, அல்லது குறைந்தபக்ஷம் இவ்வளவு தான் கொடுக்கமுடியும், இம்முறையில் தான் நடைமுறைகள் நிறுவப்பட வேண்டுமென்றோ, ஒன்றையுங் குறிக்காமல் அழகிய வார்த்தைகளால் தன் முழுசாமர்த்தியத்தையுங் காட்டி நீண்ட நேரம் பேசியுள்ளார். சிறு பான்மையோரின் குறைகள் கவனிக்கப்படவேண்டுமென்கிறார். இருவ

ருடைய நன்மையையும் உத்தேசித்துத் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றவே இக்கூட்டம் கூடியுள்ளதென்கிறார். இதில் பிளவு கொள்ளாமல் புத்திசாலித்தனமாக இருவரும் நடந்துகொள்ள வேண்டும்; பிரிட்டிஷார் எவ்வளவு குறுகிய மார்க்கத்தைக் காட்டினும் அதை இந்தியர் ஒப்புக்கொண்டே அவ்வழி செல்ல வேண்டுமென்ற பொருள்படத் தெளிவாக எடுத்துச் சொல்லுகிறார். சுதேச மன்னர்களும் இங்கு ஒன்றுபட்டதைக் கண்டு அவர்களைத் தூக்கிவைத்துப் புகழ்கிறார். இவ்வாறெல்லாம் பலப்படபேசும் அவர் குறிப்பிட்ட சீர்திருத்தம் பற்றி முடிவொன்றுங் கூறாமலே பேசி முடித்துவிட்டார்.

இதற்கு மேல் எல்லாப் பிரதிநிதிகளையும் லார்டு சாங்கே என்பவரின் தலைமையில் ஐக்கிய அரசியலமைப்புக் கமிட்டிஎன்ற பெயருடன் கூட்டி எவ்வாறான திட்டத்தை நிறுவ வேண்டும்; இந்தியாவின் ஐக்கிய அரசியலமைப்பு எவ்வழி அமைக்கப்பட வேண்டும்; அதில் எவரெவர்க்கு எவ்வளவெவ்வளவு அதிகாரங்களிருக்கவேண்டும் என்ற தீர்மானத்தைச்செய்ய சிறுசிறு கமிட்டிகளாக எல்லாக் கக்ஷியாரும் கூடி யோஜித்துவருகின்றனர். லார்டு சாங்கே பிரபு முடிவான ஓர் திட்டத்தைத் தயாரித்து வருகிறார். இது தான் அம்மஹாநாட்டின் இரண்டாவது அத்தியாயம். இது முடியக் குறைந்தது இரண்டு வாரங்கள் செல்லுமெனத் தெரிகிறது. இது முடிந்ததும் அத்திட்டம் மஹாநாட்டிற்கு விவாதத்திற்கு வரும். பிறகு அது பற்றி ஆராய்வோம்.

லண்டனில் கூடியுள்ள இந்தியப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி இந்து முஸ்லீம்கள் ஒற்றுமையான முறையில் ஐக்கிய அரசாங்கத்தில் கலந்துகொள்ள ஓர் முடிவு செய்வதில் பஹீரதப் பிரயத்தனஞ் செய்தும் பொதுவாக்காளர் தொகுதியை வகுக்கும் விஷயத்தில் முஸ்லீம்கள் ஒத்துக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது. இவ்வேற்றுமை பொதுவாக சமஸ்தானங்களில் கிடையாது. பிரிட்டிஷ் இந்தியாவில்தான் அடிக்கடி இச்சச்சரவு உண்டாகிறது. அதுவும் அடிமை நாடாக உள்ளபடியாலும், நம்மை ஆளுபவர்களின் தந்திரத்தாலுமே உண்டாகிறதன்றி, சுதந்தரம் பெற்றபின்னர்

அது தானாகவே ஒழிந்து விடும் எனப் பலஹிந்து முஸ்லீம் பிரதிநிதிகள் பேசியுள்ளனர். தாழ்ந்தோரென ஒதிக்கிவைக்கப் பட்டவர்களின் பிரதிநிதிகளும் கடந்த 150-வருட பிரிட்டிவ்ஷ் அக்ஷியில் தங்களுக்கு யாதொரு விசேடமுன்னேற்றமும் கிடைத்துவிடவில்லை யாகையால் நாங்களும் ஐக்கிய அரசாங்கத்தில் இடம் பெற்று சீர்திருத்தமடைவோம் எனப் பேசிவிட்டனர்.

இம்முறையில் இந்தியாவின் உண்மைதேசிய வீரர்கள் இம் மஹாநாட்டில் யாதொரு நன்மையும் விளையாதென அங்கு செல்ல மறுத்துச் சிறையில் வாடிக்கொண்டிருப்பதையும் பொருட்படுத்தாமல் அங்கு சென்று தங்கள் அபிப்பிராயத்தையுஞ் சொல்லி அதற்கவர்கள் கூரிய மாறுபட்டபதிலேயும் கேட்டபின்னரும் இன்னும் ஒத்துழைத்துப் பார்ப்போம்; கடாசிவரையில் வீடுதிரும்பும் வரையில் நாங்கள் நம்பிக்கையை இழக்கமாட்டோமென்ற கொள்கையுடன் விளங்கும் பலபிரதிநிதிகளே ஏமாருத முறையில் திருப்பதியுடன் பிரிட்டிஷார் விடனுப்பு வார்களாவென்பது இன்னுஞ் சந்தேகமாகவேதோன்றுகின்றது. 'ஒன்று சுதந்தரத்துடன் அனுப்புங்கள்; அல்லது குழிவெட்டி எங்களைப் புதையுங்கள்; இவ்வடிமை முறையில் நாங்கள் இந்தியா திரும்போம்' என வீர முழக்கஞ் செய்த வீரர் முஹம்மதலி போன்றவர் களின் பேச்சு வெறும் பேச்சுக்கிடமாகி விடுமோ வென்றுதான் இதுவரையிலும் நிதானிக்க வேண்டியிருக்கிறது. 'இன்னுமா உங்களுக்கு நம்பிக்கை உடனே தாயகம் திரும்புங்கள்' என்ற கெல்கார்போன்ற அறிஞர்களுடைய தந்திக்கும் லண்டனிலுள்ள பிரதிநிதிகளின் பதில், கொஞ்சம் பொருங்கள்; எங்களுக்கும் வெறுப்பேற்படின் அவ்வாறே திரும்புகிரோம் என்றபொருள்பட விளங்குகிறது. அதிகாரவர்க்கத்தவரின் பேச்சோ, நீங்கள் இவ்வளவு சீக்கிரம் எங்களைத் தொந்தரவு செய்தல் வீண் என்பதைப் போன்றிருக்கிறது. இச்சங்கட நிலை எம்முடிவுறுமோ? ஈசனே அறிவர்.

எது எவ்வாருயினும் இந்திய சுயநிர்ணயக் கொள்கையை லண்டனில் வாழும் பிரிட்டிஷாரின் உதவியால் நீங்கள் நிலைநிறுத்துவதென்பது பகற்கனவாகும்; அது உங்களின் உழைப்பாலும்

அஞ்சாதவீரத்தாலுமேநிறுவப்படவேண்டும்,என்றதேசியத்தலைவர் காலஞ்சென்ற லாலாஜியின் பொன்மொழிகளை இங்கு ஞாபகப்படுத்துகிறோம். ஒருபக்கம் சமாதானம் பேசும் பிரிட்டிஷ் அரசாங்கம் மற்றோர் பக்கம் இந்திய வீரர்களையும் தாய்மார்களையும் அடக்குமுறைக்கு ஆளாக்கியும் சிறைகளில் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளடக்கியுஞ் செய்து கொண்டிருக்கும் பொழுது செய்யப்படும் சமாதானம் எங்ஙனம் நிலைநிற்கும். ஒன்று சர்வகக்ஷி மஹாநாடு முடிவுறும் வரையேனும் அடக்குமுறை நிறுத்தப்பட வேண்டும். அல்லது இந்தியாவில் சமாதானத்தை நிலைநிறுத்திக் கொண்டு சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும். இரண்டுங் கெட்ட நிலையில் இப்பொழுது செய்யவிருக்கும் வேலை மிக்க கஷ்டமான தொன்றே. இதன்முடிவு என்னாகுமோ? அறியோம். இப்பொழுது சமாதான மஹாநாட்டில் பேச்சுகள்தான் முடிவடைந்துள்ளன. இனிமேல்தான் பல்வேறு சிக்கலான பிரச்சினைகளும் பைசல் செய்யப்படவேண்டும். இன்னும் இரண்டு வாரங்களில்தன் முடிவும் தெரியும். காத்திருந்து கவனிப்போம்.

நமது பிரதிநிதி.

நமது 'நவமணி'யின் பிரதிநிதியாக மலேயாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டிருக்கிற ஆ. மு. ரேத்தினம் அவர்கள் தைப்பின், சித்தியவான், ஈப்போ, பேரு முதலிய விடங்களில் இப்பொழுது பிரயாணஞ் செய்கிறார். அங்குள்ள நமது அன்பர்கள் நல்ல ஊக்கங் காட்டி மிக அதிக மில்லாது போயினும் கூடுமானவரை உதவிவருவதாகவும் சந்தாதார்களின் எண்ணிக்கையும் பெருகிவருவதாகவும் தெரிகிறது. அதேபோன்று அவர் இன்னும் வரவிருக்கும் இடத்திலுள்ள அன்பர்களும் நல்ல முறையில் ஆதரித்து தகுந்தஉதவி செய்வார்களென எதிர்பார்க்கிறோம். மானேஜர்.

மணியொளி.

நற்செய்தி.

இவ்வூர் திவான்பஹதூர் அ. மு. மு. முருகப்ப செட்டியா ரவர்களை அறியாத தென்னாட்டார் எவருமிரார். அவரின் சலியா உழைப்பும் பொதுஜன சேவயின் ஆர்வமும் தொழிலாற்றும் திறமையின் முதிர்ந்த அனுபவமும் செல்வச் சிறப்புமே அவர் களை இந்நிலைக்குக் கொண்டுவந்தது. இளமை முதல் மூடப்பழக்க வழக்கங்களிலும் குருட்டு நம்பிக்கைகளிலும் அவர்கள் மனம் ஒன்றி வாழாமையே இச்சீர்திருத்த உலகில் அவர்களை முன்னணி வகிக்கச் செய்தது. அவர்களின் தகுதி அறிந்த சென்னை அரசாங் கம் 1931-ம் ஆண்டின் சென்னை நகர ஷரீப் (பட்டினத் தலைவர்) ஆக நியமித்திருக்கிறார்களென்ற செய்திகேட்ட நாம் சந்தோஷிக்கி றோம். இன்னார் இப்பெருமைக்குப் பாத்திரமானது கண்ட எவரும் அவர்களைப் பாராட்டி மகிழ்வரென்றே எண்ணுகிறோம்.

பாகனேரியில் 144.

இச்செட்டியார் நாட்டில் பாகனேரி என்னும் ஊரை யாவரும் அறிவர். அங்கு தேசியசபையோ, அன்றி தேசியக் கிளர்ச்சியோ, சத்தியாக்கிரஹச் செயலோ இருந்ததாக நாம் கேட்டோமில்லை. அவ்வூரில் சமீபத்தில் வீரர் ஜாவேரிலால் நேருவின் பெயரால் ஓர் வாசகசாலை அதாவது:— அவ்வூரிலுள்ள பொதுஜனங்கள் ஓய்வு நேரங்களில் படித்துப்பயன்பட மட்டுமே உதவும்படி திறந்து வைப்பதென அங்குள்ள சிலர் முடிவுசெய்து அவ்விழாவை மதுரை வக்கீல் திரு. ஏ. வைத்தியநாதய்யரவர்களைக் கொண்டு நடத்த முடிவுசெய்திருந்தனர். இதில் போலீசார் தலையிடாம லிருந்திருந்தால் எவ்வித ஆர்ப்பாட்டமோ, அரசியல் விவகாரமோ, அன்றிக் குழப்பமோ இன்றி அமைதியாக நடைபெற்றிருக்கும். அதற்கு மாறாகப் போலீசார் தலையிட்டுப் பல உத்தியோகஸ்தர் களும் போலீசாருமாக அங்கு கூடி உடனே பெரிய அரசியல் கிளர்ச்சியை அடக்கும் 144 செக்ஷனைப் பிரயோகஞ்செய்து கூட்

டம் கூட்டுவோரையும் கட்டடம் உதவினவரையும் தலைவரையும் தடுக்கவே அங்கு சட்டமறுப்பும் குழப்பத்திற் கிடமும் ஆர்ப்பாட்டமும் தேசிய வீரமும் தானே ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஏன் வீணான இந்த ஆர்ப்பாட்டம். போலீசார் இவ்வாறாக கிளர்ச்சியற்ற இடங்களிலும் கிளர்ச்சியை உண்டுசெய்யாமல் பேசாதிருந்துவிடுவார்களேயானல் இவ்வைபவங்களெல்லாம் இராஜீயக் கிளர்ச்சியற்ற முறையில் கிரமமாகவே நடைபெறும்.

ஸர். பொ. இராமனாதர்.

இலங்கை அரசியல் சீர்திருத்தக்காரருள் ஒருவரும் தமிழ் பாஷாபிவிர்த்தியில் முன்னின்றுழைத்தவரும் பல்வேறு தர்மஸ்தாபனங்களை நிறுவியவரும் பெண்கல்வியில் ஈடில்லா உழைப்பு மேற்கொண்டவரும் எவருக்கும் அஞ்சாது மனச்சாக்ஷியையே பெரிது என மதித்து நடந்தவரும் இலங்கை அரசாங்கம் குடிகள் பால் செய்த தவறுகளை ஆண்மையுடன் கண்டித்துப் பெருஞ் சாதகங்கள் பல பெறக் காரணஸ்தரும் கண்ணியமான குடும்பஸ்தரும் இலங்கைக்கே திலகம்போன்றவருமான ஸர் பொன்னம்பலம் இராமனாதர் தமது 80-வது வயதில் இலங்கைத் தீவின் தலைநகரான கொழும்பில் இம்மாத மத்தியில் காலமானார் என்ற செய்தி கேட்ட எவரும் வருந்துவார் என்பதில் ஐயமில்லை. இவ் இலங்கை வாசிகள் பல வகையிலும் இந் நல்லசமயத்தில் அவர் மரணம் நேர்ந்தது கண்டு மிக வருந்துவர். ஆயினும் நம் செயலினும் வல்லானான ஒருவனின் விருப்பம் அதாகையால் அவர் நீங்கியது கண்டு வருந்தாது அவர்விட்டுப்போன குறை வேலைகளை முடிப்பதன் மூலம் அவருக்கு ஓர் ஞாபகார்த்தத்தை இலங்கை வாசிகள் நிலைநாட்டுவரென எதிர்பாக்கிறதோடு இராமனாதரின் ஆத்மாசாந்தியுறுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

சர். ஸி. வி. இராமன்.

இரண்டாந்தடவையாக பூதத்துவ சாஸ்திர வல்லுனர் என்பதற்காக நோபில் பிரைஸ் பெறுவதற்குச் செல்லும் சர் ஸி. வி. இராமன் என்ற பெரியாரை நாம் உங்கட்க்கு அறிமுகப்படுத்துகிறோம். இப்பரிசை முதலில் பெற்ற இந்தியர் மகாகவி ரவீந்திர

நாத தாகூரேயாகும். அதன் பின் இரண்டாவது முறையாக இதைப் பெறும் இராமன் என்பவர் தென் இந்தியர் என்ற செய்தி கேட்டு யாவரும் சந்தோஷிப்பர் என எண்ணுகிறோம். இப்பரிசு விழா ஸ்டாக் ஹாமில் டிசம்பர் 11-உ நடைபெறும். அன்று அங்கு அவர் ஓர் சொற்பொழிவு நிகழ்த்துவார். இது ஆல்பர்ட் நோபில் என்பவரால் நிறுவப்பட்ட சிறந்த பரிசாகும். அதைமஹாமேதாவிகளே பெறமுடியும். அதை இவ்வாண்டு பெறும் ஸி. வி. இராமன் அவர்கட்கு நாம் வாழ்த்துக் கூறுகின்றோம்.

இது கொடிது.

நமது சகவர்த்தமானியான "ஊழியனில்" காரைக்குடியிலுள்ள நலஉரிமைத் தொண்டர்சங்கத்தைப் பற்றிய நிலைமையை எடுத்தெழுதியது அவர்கள் மனதில் விரோதப் பான்மையைக் காட்டியதாக நலஉரிமைத்தொண்டர்சங்க உதவித்தலைவர் "ஊழியன்" உதவியாசிரியர் நடராஜன் அவர்களை தனிமையாக தனது ஜாகையைப் பார்க்கச் சென்றபொழுது கன்னத்தில் ஒரு அடியுங் கொடுத்து கிழேவிழுந்த மூக்குக்கண்ணாடியையும் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டாராம். அது விஷயமறிந்தும் அச்சங்கத்தார் அவர் பேரில் ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லையாம். இது உண்மையாயின் இதனினும் ஓர் சீர்திருத்தக்காரர் எனப் பெயர் சூடியவர் செய்யவேண்டிய கொடுமை வேறொன்றுமில்லை என்றே நாம் துணிந்து சொல்லுவோம். அச்சங்கத்தார் உடனே இது பற்றி தக்கது செய்யாவிடின் அதன் தகுதிக்கு இதுஒவ்வாததென்றுஞ் சொல்லுவோம்.

சங்கங்கள் சீர்திருத்தவேலைகளைச் செய்ய இயலவில்லை யாயினும் பொதுஜனங்களுக்குஹிம்சையைவிளைவிக்காமலாயினுமிருக்க வேண்டும். அந்நிலைதவறி பொதுஜன விரோதத்தை வளர்க்க ஆரம்பிக்கும் எந்த ஸ்தாபனத்தையும் அரசாங்கத்தாரும் அச்சங்கங்களிலுள்ள நல்லறிஞர்களும் முயற்சித்து அதை நிவர்த்திக்க வழி தேடவேண்டும். இச்சங்கத்திலும் சில நல்லவர்களும் அங்கம் பெற்றிருப்பதோடு பல நல்லோரின் உதவியும் அது பெறப்படுகிறதாகையால் இக்கொடுமை உடனேகவனிக்கப்படவேண்டியதாகும்.

ஆந்திர நாடு.

பதினைந்தாம் நூற்றாண்டின் பாஷையின் நிலைமை.

(260-வது பக்கத் தொடர்ச்சி.)

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் எழுதுவது.

இக்காலத்தில் அரும்பெருங் கவிகள் ஆந்திரநாட்டை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் முதன்மையுடன் புகழ் பெற்று விளங்கியவர்கள் மதுரன், மல்லண்ணன், அபிவனவச் சந்திரன், கவிமல்லன், தேவராஜன், லட்சுமீதரன் முதலான கன்னட கவிகளும்; சோணுத்ரி டிண்டிமன், நரஹரி, சௌண்ட பாசார்யன், விஷ்ணுசூரி, பாயணுசார்யன், மாதவன் முதலான சம்ஸ்கிருதப் புலவர்களும்; அனந்தமாத்யன், ரவிபாடி, திரிபுராந்தகன் முதலான தெலுங்கு பண்டிதர்களுமே. இவர்களுடன் புலவர் திலகமாய் முதல் தேவராயன், "விஜய வித்யா தேவராயன்" என்ற விருதுப் பெயர் பெற்று விளங்கினன். அன்றியும், இம்மடி புக்கன்னன் அரசுசெய்தகாலத்திலும், முதல்தேவராயன்செங்கோலாட்சியிலும் புலவர்களும், அமைச்சர்களும் பரஸ்பரம் அன்னியோன்னிய முடையவர்களாயும், அன்புடையவர்களாயும் நட்பு மேலோங்க வாழ்ந்துவந்தார்கள். இவற்றிற்குப் பல சான்றுகளுண்டு. ஈண்டு ஒன்றைமட்டும் குறிப்பிடுகின்றோம். அது வைதீக மதோத்தாரகனும், கர்னுடக ராஜ்ய பிரதிஷ்டாபனு சார்யனுமான 'ஸ்ரீவித்தியாரண்ய' ருடைய சகோதரியான 'சிங்காம்பாள்' புதல்வனே முதல் தேவராயன் முதன் மந்திரியாகவும், மதுரகவி போஷகன் என்ற புகழ்ப் பெயருடைய 'லக்ஷ்மண பண்டிதன்' இரண்டாம் அமைச்சராகவும், 'புக்கன்' என்ற அரசனது காலத்தில் "முகூர்த்த தீபிகை" என்னும் நூலியற்றியவரும், விஷ்ணுசூரி என்னும் பெயருடையவருமான மாதவ சூரியின் புதல்வன் 'சபாநாயகனுகவும்' இருந்தார்களென்பது. இக்காலத்தில் முதல் தேவராயனுக்கு "மல்லப மண்டலாதீபன்" என்று விருதுப் பெயர் வழங்கிவந்ததாகத் தெரிகிறது.

அன்றியும், கன்னடபாஷையில் "சோபகின சோனே" என்ற

கிரந்தத்தை இயற்றிய தேவராஜனுக்கு "குமார கம்பநந்தனன்" என்பது இயற்பெயரென்று அறியப்படுகிறது. சோணுத்ரி டிண்டிமன் குலகவியாய் அமைந்திருந்தான். இம்மடி புக்கன் குமாரன் வீரபூபதிகாலத்திருந்த சௌண்டபாசார்யன் புக்கனை "யுவபுக்க பூபாலஸ்ய ராஜவியாஸ வால்மீகே" "கர்ம பிர்மமாத்வனீசஸ்ய" என்று புகழ்ந்து பாராட்டியிருக்கின்றனர். இதனுல் போஷிக்கின்றவனுக்கும், 'போஷகனுக்கும் அன்பும் ஐக்கியமும் அதிகரித்திருந்ததாகத் தெரிகிறது. இராஜகம்பீர மரியாதைக்குறிய விருதுக்கள் ஹரிஹரன் அரசுகாலத்திலிருந்தே நிலைபெற்றிருப்பினும், இம்மடி புக்கன்னன் முதலானவர்களுங்கூட தங்கள் சாஹித்யாதி விருதுக்களுடன் இவ்விருதுக்களையும் கொண்டு சிறந்திருந்தார்கள். இக்காலத்தில் சோணுத்ரி டிண்டிம கவிக்கும், 'லக்ஷ்மணகவி' என்று விருதுப்பெயர்பெற்ற க்விமல்லனுக்கும், பெரும் கல்விப் போர் நிகழ்ந்ததென்றும், அப்போரில் மல்லன் தோல்வியடைந்தானென்றும், டிண்டிமனுக்கு "கவிமல்ல கல்லதாடனபடு" என்றுள்ள விருதுப்பெயரால் விளங்குகிறது. இக்கவிமல்லன் "மன்மத விஜயம்" என்னும் நூலின் ஆசிரியனோ? மற்றொருவனோ தெரியவில்லை. மன்மதவிஜயம் சிங்கார ரஸங்கள் நிரம்பிச் சுவைமலிந்த திப்பிய நூல். தேவராயன் புலமை யறிவுடையவன் என்பதற்கு அவ்வரசன் கன்னடபாஷையில் இயற்றிய "அமருகம்" என்ற நூலே சான்றும். மேலேகாட்டிய புலவர் பெருமக்களில் முதன்மை ஸ்தானம் பெற்று அக்கிரகண்ணியனுக விளங்கியவர் மதுரன் என்னும் பெயரினனே யாவன். இக்கவீச்சுரன், ஹரிஹரன் தண்டநாயகனை முத்தப்பன் உத்திரவின்படி "தர்மநாத புராணத்தை"க் கன்னட பாஷையில் இயற்றினனென்று தேவராயன் மந்திரியான "லட்சுமணுத்யன்" வெட்டுவித்த சாஸனம் கூறுகிறது. விஜயநகர சாம்ராஜ்யத்தில் ஜைனமத சம்பிரதாயக் கவிகளில் "நானுர்த்த ரத்தினமாலா" என்ற நூலின் கர்த்தாவான இருகப்பதண்ட நாதனும், தர்மநாதபுராண கர்த்தவான மதுரனுமே பிரதான புலவர்கள். லக்ஷ்மணுத்யன் கவித்வ நிபுணன் என்று பலசான்றுகள் காணக்கிடக்கின்றன. சாஸனங்களில் குறிக்கப்பட்ட புலவர்கள் பல்லோரில் தாவணிக்கரை சாஸனங்களில் குறிப்பிட்டுள்ள

பாயணாசார்யனும், தேவராஜ மித்திரனுமே முக்கியமானவர்கள். தேவராஜமித்திரன், தேவராயன் ஆஸ்தானத்துப் புலவராய் விளங்கினன். இக்கவியை தேவராயன் புதல்வனான 'இராமச்சந்திரன்' என்பவன், உதயகிரி ராஜ்யத்தை அரசுபுரியும் சென்னபட்டன் என்னும் அரசனுக்கு வழங்கியபோது அத் தான சாஸனத்தில் இச்செய்தியைக் குறித்திருக்கின்றான். இந்தச் சென்னபட்டனே, சர்வக்ஞ விஷ்ணுதநயனும், தர்க்க பாஷ்யகாரனுமாயிருக்க வேண்டும். இக்காலத்திலே தான் மாத்வ குருக்களும், ஸ்மார்த்த குருக்களும் அநேக நூல்களை இயற்றினர். நூல்களை இயற்றியதோடு கல்விப்போரும் நிகழ்த்தினர். இக்கல்விப்போருக்குத் தலைமைவகித்தவர், பரிவிராஜகாசார்யரான ஆனந்த சரஸ்வதி தீர்த்த ஸ்ரீபாதர் என்னும் பெரியாராவர். இவரது மாணவர்களான அமிர்தேந்திர தீர்த்தன், அமிர்த பிரக்ஞை, நாராயண கிர்யாசாரியர் முதலானவர்கள் சாஸனங்களில் புகழ்ந்து பாராட்டப்பெற்றிருக்கின்றார்கள். சமகாலத்தவரான மாத்வாசார்யன், அக்ஷயோப்யதீர்த்தகர சஞ்ஞாதிகள், பாஷ்ய காரரான ஜயதீர்த்த பாதாசார்யன் என்பவர்கள், சாயன மாதவர்களுடன் வாக்குவாதம் செய்தன ரென்றும், அவ்வாக்குவாதத்தில், ஜய தீர்த்தர் வெற்றி பெற்றார்களென்று மாத்வர்களும், மாத்வாசாரியரே வெற்றியடைந்தார்களென்று ஸ்மார்த்தர்களும் கூறுகின்றார்கள். இதுபோலவே, அக்ஷயோப்யர்கள் வித்யாரண்யர்களுடன் வாதஞ்செய்து வெற்றி பெற்றனரோ! இல்லையோ! தெரிவது கஷ்டசாத்யமா யிருக்கிறது.

"சர்வதரிசன சங்கிரகம்" என்னும் நூலின் கர்த்தாவான மாதவன், சாயணாசார்யரின் மூன்றாவது புதல்வன் என்றும், சங்கீதசாகித்ய கலாப்பிர வீணன் என்றும் அறியப்படுகிறது. இதே காலத்தில் தான் விஜயநகர அரசர்களுக்குக் குல குருவானகிரியா சக்தியாசார்யர்களில் திரியகம்பக கிரியா சக்திகுருக்கள், 'கம்பராய சரித்திரத்தை' இயற்றிய கங்காதேவிக்கும் "சோபகின சோனே" என்னும் நூலின் ஆக்கியோனான தேவராஜனுக்கும், விஜயபூபதிக்கும், பரமாசாரியனாக விருந்தான். தேவராஜ திரியம்பகா சார்யர்களால் கன்னட பாஷையில் ஆசுகவியாகவிளங்கினான் என்று கூறுவதனால், இவன் வடமொழியிலே யன்றி தேசபாஷைகளி

லும் பாண்டித்யம் வாய்ந்தவனென்று விளக்கமாகின்றது. மற்றும், இத்திரியம்பக கிரியா சக்தி ஆசார்யார் ஆணையிட்டருளியவாறு விஜயபூபதி சகம் 1332 விகிருதி வருடத்தில் தனது குருவின் பெயரில், "கிரியா சக்திபுரம்" என்ற அக்கிரகாரத்தைக் கட்டித் தானம் செய்ததாகத் தாமிரசாஸனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

'அரிமாநோக்கு' என்னும் விதிப்படி இக்காலத்தில் ஆராயப் பட்ட 'யுத்தாமகவி' என்னும் பெயருடைய புலவனது செய்தி தெளிவுற விளங்காகமலிருப்பதற்கு விதாயம் அறியக்கூடவில்லை. சாஹித்திய சமுத்திர அலைகளின் மோதுதலோ, வேற்றரசர் படையெடுப்போ, போரின் பேரொலியோ, வேறு யாது காரணமோ, இலக்கிய வரலாற்றின் ஸ்தானம் மேலான நிலையை அடையப் பெறுமற்போயினும், இனி அரியாசனத்தில் அமரவிருக்கும் இம்மடி தேவராயன் அரசுகாலத்தில் நிகழப்போகும் இலக்கிய அபிவிருத்திக்குப் பிற்காலத்தில் தோன்றிய 'சாயண மாதவன்" 'வேதாந்த 'தேசிகன்' 'அக்ஷோப்யதீர்த்தர்' முதலான 'சமயவாதிகளின் தர்க்கவாதங்களின் பேரொலிகள் முன்னறிகுறியாக விருந்தது.

(தொடரும்.)

இது நல்ல தர்மம்!

ஆரம்பமுதல் சிலர் பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு பணம் அனுப்பாமலிருக்கிறார்கள். அவர்களுக்கு வி. பி. யனுப்பினால் தேவையில்லை என்ற ஒரே வார்த்தையைச்சொல்லி வி. பி. யைத் திருப்பிவிடுகிறார்கள். இது நல்ல தர்மம். பத்திரிகை தேவையில்லாத பெரியோர்கள் முதலிலேயே திருப்பிட்டால் எவ்வளவு நன்றாகவிருக்கும். அல்லது வி. பி. யனுப்புவோம் என முன்னெச்சரிக்கை செய்யும்பொழுதாவது வேண்டாமென்றால் வி. பி. செலவாவது மிஞ்சுமே. அதையும் கடந்து பலவகையிலும் நஷ்டமாக்கும் இத்தர்மவான்களை எதற்கு ஒப்பிடலாம்?

சிக்கனம்.

திரு. ச. தா. பா. அவர்கள்.

ஒருவரது வாழ்க்கையில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய பல அம்சங்களில் சிக்கனமும் ஒன்றாகும். சிக்கனம் இல்லாத உலகம், மதம், குடும்பம் ஆகிய பலவும் சமயங்களில் திண்டாடும்படி நேரிடுமென்பதில் ஐயமில்லை. இப்போது எங்கு பார்ப்பினும் இப்பேச்சே தொனித்துக் கொண்டிருக்கின்றது. சிக்கனத் திட்டத்தில் (Economic Problem) பெயர்பெற்ற ஆசிரியர்களைக் கடந்த பல வருடங்களாகப் பலபெரிய கல்லூரிகளில் நியமனஞ்செய்து வருகின்றதையுங் காண்கிறோம். உயர்தரமாணவர்கட்கு தங்கள்பாடங்களில் இதனையும் ஒன்றாக்கப்பாடுபட்ட சிக்கனத்திட்டத்தில் பெயர் பெற்ற ஸர். டி. விஜயராகவாச்சாரியார் போன்ற பலபெரியோர்களின் மான்மியம் உலகெலாம் வியாபித்து நிற்கின்றது. இந்தியா கவர்ண்மெண்டார் தங்கள் அரசாக்ஷிக்குள் என்னென்னவழிகளில் சிக்கனத்தைக்கையாட லாமெனக்கூறும்படி ஓர்சிக்கனக்கமிட்டியை லார்ட். இஞ்சுகேப்பின் தலைமையில் நியமித்து, அக்கமிட்டியாதாஸ்தின்படி அநேக இலாகாக்களில் சிக்கனத்தைக் கையாண்டு வருகின்றார்கள். சென்னை இராஜதானி சம்மந்தப்பட்டமட்டில் மட்டுமன்று. மற்றும் பல இடங்களிலும் அரசாங்கத்தார் தாங்கள் அநுப்பும் கவர்களில் கூட சிக்கனத்தைக்கொண்டு, சிக்கனச்சீட்டுஒட்டி அனுப்பும்முறையை அநுசரித்துவருகின்றார்கள். சிக்கனத்தால் பணம் மீதமாவதுடன், காரியங்களும் கிரமமாய் நடைபெற்று வருகின்றது. சிரமமும், சிக்கனமும் இல்லாத எவ்விஷயமும், தாறுமாறாக அதிகப் பணத்தையும், சிரமத்தையும் இழுப்பதுடன், அதற்கு ஓர் முடிவின்றி நாளுக்கு நாள் அதிகச் செலவிற்கே வழியாகின்றது எனக் கூறவேண்டும். சிக்கனத்தைக் கையாளும் ராஜாங்கம் ஏராளமான பணத்தை சேர்த்து, தங்கள் பொக்கிஷசாலைகளில் இருப்புக்கட்டி வைப்பதால், யாதொருகவலையின்றி வேண்டும் சமயங்களில் தாராளமாய் செலவழிக்கக் கூடியவர்களாகின்றனர். எனவே, ஓர் குடும்பத்தையே ஓர் ராஜாங்கத்திற்குச் சமானமாகவே கூறலாம்.

குடும்பத்தில் சிக்கனம்.

குடும்பத்தில் சிக்கனம் இருப்பது, கவலையற்ற வாழ்க்கைக்கு அஸ்திபாரமிட்டது போலாகும். சிக்கனமில்லாத குடும்பங்கள் பல, ஆராதூரித்தனமாகச் செலவழித்து, செலவிற்கு வழியின்றிக் கடன்வாங்கி, கடனையும் கட்டத்தெரியாது திகைத்து திண்டாடு கின்றார்கள். குடும்பவாழ்க்கையைச் சந்தோஷமாயும், சமாதான மாயும் நடத்தவேண்டுமாயின், ஆங்கு இன்னல்களுக்கான காரியங் களினின்று, குடும்பம் ஒதுங்கிநிற்கவேண்டும். சகலதுன்பங்களையும் விட, ஒருவனுக்கு அதிக வருத்தத்தை யளிப்பது கடன் தொல்லை யே யாகும். இதனாலேயே கவிச் சக்ரவர்த்தியாரும் இராவணன் இருதயத்திற்கு, கடன்பட்டார் நெஞ்சத்தை உபமானித்துக் கூறினர். பல குடும்பங்களில் தக்கவருவாயிருந்தும், இவர்கள் ஓர் திட்டமான—சிக்கனமான—முறைகளைக் கையாளாமையால், தாங் களாகவே அநேக கஷ்டங்களை வருவித்தும் கொள்ளுகின்றார்கள். முப்பது ரூபாய் சம்பளமுள்ள ஒருவரது குடும்பவாழ்க்கை எங்ங னம் நடைபெறவேண்டும்? ஐம்பது ரூபாய் வருவாயுள்ளவர் குடும்பம் எம்முறையில் செல்லவேண்டும்? இதனை விடுத்து நூற் றுக் கணக்கில் வரும்படியுள்ள ஒருவரது குடும்ப நிலை என்னவாம்? என்பதை யாவரும் அறியாமலில்லை. என்றாலும், முப்பது ரூபாய் வருவாயுள்ள குடும்பத்தினர், ஐம்பது ரூபாய் வருவாயுள்ள குடும் பத்தினர் போன்றே தாங்களும் வாழவேண்டுமென, வீணே எண்ணி, தங்கள் வாழ்க்கையைப் பெருக்கி, அதனைச் சமாளிக்கக் கூடாதவாறுத் தத்தளிக்கின்றதைக் கான்கின்றோம். பகவான் யாருக்கு என்னவிதமான நிலைமையைக் கிருபையுடன் அளித்திருக் கின்றாரோ, அந்நிலையில் திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் வாழவேண்டுமாயின், தங்கள் வருவாயின் நிலைமைக்குத் தக்கவாறு சிக்கனத்தைக் கைக்கொண்டு செம்மையாகத் தம் நிலைமையை நடத்துதலே மேன்மை. இதனை விடுத்து புலியைப்பார்த்து, பூனை சூடுபோட்டகதையாய்ச் செய்துகொள்வது யானை தன் தலையிலே தானே மண்ணைவாரிப்போட்டுக்கொண்டதையே ஒக்கும். குடும் பத்தில் ஐக்யப்பட்டுள்ள கணவனும், மனைவியும் ஒவ்வொரு மாதத் திலும், தங்கள் வரும்படியென்ன? இவற்றில் எவ்வளவு செல

வழித்து, எவ்வளவு மீத்து வைக்கலாம், என்பதற்கு ஓர் திட்டம் தயாரித்துக் கொள்ளவேண்டும். தள்ளமுடியாத செலவுகளைத் தவிர்த்து, ஏனைய அநாவசியமான செலவுகள் எவைகளே யானுலும், அவைகளை நீக்கிவிடுதலே அவசியம். இங்ஙனம் செய்வதால், அக்குடும்பத்தில் கடன் தொல்லை எக்காலமும் இராது. மேலும், மாதந்தோறும் சிறிது மீத்துவைப்பதால், இவர்களது அவசரச் செலவுகளுக்கோ, அல்லது பிற்கால வாழ்க்கைக்கோ இவைகள் உதவக்கூடியதாயிருக்கின்றது. சிக்கனத்தைக் கையாளுவதென்ருல் சிலருக்குக் கடினமாகவே தோன்றலாம். ஆனுலும், இம்முறையைக் கையாடிய பின்னர் இதனுல் உண்டாகும் நன்மைகளை அவர்கள் அறியும்போது வியப்படைவர்.

மாணவர்களுக்குள் சிக்கனம்.

இப்போது பெரிதும் கவனிக்கப்படவேண்டிய விஷயம் மாணவர்களுக்குள் சிக்கனம் என்பது பற்றியே. மாணவர் உலகம், இப்போது சிக்கனத்தைக் கையாள முற்படுமாயின், அதனுல் லக்ஷக்கணக்கான ருபாய்கள் வீணே செலவழிகப்படுவதினின்று தடுக்கப்படலாமென்பது என் கருத்து. வீண்படாடோபங்களிலும், நாகரிகமென்னும் மயக்கிலும், இப்போது அதிகமாய்ஆழ்ந்திருவது மாணவர்களேயாகும். ஒவ்வொரு மாணவனும் இதனை நன்கு யோசிக்க வேண்டும். இவனது கல்விக்கென்று, பெற்றோர்கள் மாதந்தோறும் பணம் செலவழித்து வருகின்றனர். உடை, ஆகாரம், பள்ளிக்கூட சம்பளம், மற்றும் இதர அவசியமான செலவுகட்குப் பணம் கொடுக்கப்படவேண்டியதும், படிக்கின்ற பிள்ளைகள் செலவழிக்க வேண்டியதும் நியாயமே. ஆனுல் வாஸ்லைன், காபிஹோட்டல், பயாஸ்கோப், நாடகம், சர்க்கஸ், மற்றும் பல வீணுன வழிகளில் பணத்தை வீணே வாரி இறைக்கும் மாணவர் தொகைக்கு கணக்குண்டா? தங்கட்கு அவசியமற்ற காரியங்களில் செலவழிக்கும் பணத்தை மீதப்படுத்தி, சேவிங்ஸ் பாங்கியிலோ, அல்லது தங்கள் பெற்றோரிடமோ கொடுத்துவைப்பார்களாயின், இதனுல் ஏற்படும்நன்மைகள் அனந்தம். சிக்கனத்தைக் கையாளும் மாணவர்கள், பெரியவர்களாகி தங்கள் வாழ்க்கையை

நடத்தும்போது, சிக்கனமுறையால் பல நன்மைகளைப் பெறுவ தற்கு அருகதையுள்ளவர்களாகின்றனர். இந்நாட்டிற்கு ஏனைய நாடுகளிலிருந்து வரும், அநேக படாடோபமான சாமான்கள் விலையாவதெல்லாம் இப்போதுள்ள மாணுக்கர்களினலேயே. ஒரு மாணவன் விநோதமான ஜெர்மன் கத்தி ஒன்றை வாங்குவானு யின், உடனே அதாவது ஒரு வாரத்தில் அந்நகரிலுள்ள கலா சாலை மாணவர்கள் முக்கால் வாசிப்பேர் கைகளிலும் இக்கத்தி இருப்பிடம் வைத்துவிடுகின்றது. இப்படியே, ஒவ்வொரு நவீன சாமானும், மாணவர்களாலேயே ஏராளமாக வாங்கப்படுகின்றன. தங்கட்கு மிக்க அவசியமானவைகளைத் தவிர மற்றவைகளில் மோகம் கொள்ளாமலும், அவைகளைக் கண்ணுற்கூட பார்க்காம லும் இருப்பதே நலம். இதனைப் பெற்றோர்களும், உபாத்தியார் களும், பொதுஜன ஊழியர்களும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இவ்வாறே, ஒவ்வொரு ஸ்தாபனமும், பிரதி மனிதனும், பெண்மணியும் சிக்கன முறையை, என்னென்ன வழிகளில் கை யாள முடியுமோ, அவ்வழிகளில் கையாளுவார்களாயின், தேசத் தில் கடன் தொல்லைகள் தொலையும்; செல்வம் பெருகும்: மக்கள் பலர் சந்தோஷமாய் தங்கள் வாழ்க்கையை நடத்துவார்கள்.

முக்கிய அறிவிப்பு.

சந்தாதாரல்லாத சிலருக்கு நமது நவமணி வந்துகொண் டிருக்கிறது. ஆரம்பமுதல் 10 மாதங்களும் பத்திரிகையைக் கிரமமாகப் பெற்றுக்கொண்டு சந்தாத் தொகை செலுத்தவேண் டிய காலத்தில் சிலர் பேசாமலிருந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு வி. பி. யனுப்பினல் வி. பி. யையும் திருப்பிவிடுகிருர்கள். அவர் கள் எங்களுக்கு வீண் நஷ்டத்தைக் கொடுக்காமல் தங்களுக்குத் தேவையில்லையாயின் வி. பி. யனுப்பு முன் தேவையில்லை என அறிவித்துவிட்டால் மிக நலமாக விருக்கும். இதரர் களுக்கு வி. பி. யனுப்புகிறோம். அதை ஆதரித்து நவமணியை என்றும் போல் ஆதரிக்கவேண்டுகிறோம். வி. பி. யனுப்புவதைவிட சந்தா வை மணியார்டரில் அனுப்பிவிட்டால் இருவருக்கும் நன்மை.

மானேஜர், 'நவமணி' பத்திரிகாலயம்.

பூகம்பங்கள் செய்த வேலை.

கடந்த இருநூறு வருஷங்களில் நேரிட்ட பூகம்பங்களில் மிக முக்கியமானவைகளின் அட்டவணை பின்வருமாறு:—

1731 சீனு பெக்கிங்பட்டணத்தில் மரித்தவர்கள் 1, 00, 000 பேர்.

1754 காஹிராவில் மரித்தவர்கள் 40,000 பேர்.

1755 வட பாரசிகத்திலுள்ள காஷானில் மரித்தவர்கள் 40,000 பேர்.

1755 லிஸ்பனில் மரித்தவர்கள் 50,000 பேர். மொராக்கோவில் மரித்தவர்கள் 12,000 பேர்.

1797 தென் அமெரிக்காவிலுள்ள கஸ்கோவிலும், குயிட்டோவிலும் மரித்தவர்கள் 40,000 பேர்.

1811 மிஸிஸிப்பிப் பள்ளதாக்கில் பெரு வெள்ளம் ஏற்பட்டது. எனினும் மீண்டுமொரு வெள்ளம் சமீபத்தில் ஏற்பட்டது. இதனுல் இங்குள்ள மக்கள் பெரும் கஷ்டத்திற் குள்ளானுர்கள்.

1822 அலெப்போவில் மரித்தவர்கள் 20,000 பேர்.

1842 ஹெய்ட்டியில்மரித்தவர்கள் 5,000 பேர்.

1851 தென் இத்தாலியில் மரித்தவர்கள் 14,000 பேர்.

1859 குயிட்டோவில் மரித்த வர்கள் 5,000 பேர்,

1861 மெண்டோஸாவில் மரித்தவர்கள் 12,000 பேர்.

1868 பெரு, ஈக்வாட்டாரில் மரித்தவர்கள் தொகை 25,000. வீடில்லாமற் போனவர்கள் தொகை 300,000 இதனுல் விளைந்த நஷ்டம் 60,000,000 டாலர்களாகும்.

1883 கிரகாடோவில் 37,000 பேர் முழுகிப் போனுர்கள்; 5 தீவுகள் ஆழ்ந்து போயின.

1886 சார்லெஸ்டனில் மரித்தவர்கள் 96 பேர்; விழுந்து போன கட்டிடங்கள் 6,000; சேதமான புகைக் கூண்டுகள் 14,000.

1891 ஜப்பானில் மரித்தவர்கள் 10,000 பேர்; வீடில்லாமற் போனவர்கள் 3,00,000 பேர்.

1896 ஜப்பானில் மூழ்கிப் போனவர்கள் 20,000 பேர்.

1897 அஸ்ஸாமில் சொல்லி முடியாத நஷ்டமேற்பட்டது. விவரம் தெரியவில்லை.

1905 இந்தியாவில் மரித்துப் போனவர்கள் 20,000 பேர்.

1906 ஸான் பிரான்ஸிஸ்கோவில் மரித்தவர்கள் தொகை 452; விளைந்த நஷ்டம் 350,000,000 டாலர்கள்.

1906 வால்பெரெய்ஸோவில் மரித்தவர்கள் 1,500 பேர்; விளைந்த நஷ்டம் 10,00,00,000 டாலர்கள்.

1907 கிங்ஸ்டனிலுள்ள ஜமேஷியாவில் மரித்தவர்கள் 1,500 பேர்; விளைந்த நஷ்டம் 2,50,00,000 டாலர்கள்.

1908 ஸிஸிலி ஸெலேபிரியா என்ற ஊரில் மரித்தவர்கள் 76,483 பேர்.

1915 மத்திய இத்தாலியில் மரித்தவர்கள் 29,978 பேர்.

1919 ஜாவாவில் மரித்தவர்கள் தொகை 5,000

1920 மெக்ஸிகோவில் மரித்தவர்கள் 3,000 பேர்.

1920 கான்ஸுவில் (சீன தேசம்) மரித்தவர்கள் 2,00,000 பேர்.

1923 ஜப்பானில் மரித்தவர்கள் 2,19,000 பேர். சொல்லி முடியாத நஷ்டம். 7,02,000 வீடுகள் அழிந்து போயின.

1927 சீனவிலுள்ள கான்ஸ்ஸுவில் மரித்தவர்கள் 1,00,000 பேர்.

1927 ஜெருசலேமில் மரித்தவர்கள் 670 பேர்.

1927 கைடோவில் மரித்த வர்கள் 3274 பேர். காயப்பட்டவர்கள் 6,734 பேர்.

1928 டச் ஈஸ்ட் இண்டீஸ் தீவுகளில் மரித்தவர்கள் 1,200 பேர். காயப்பட்டவர்கள் 600 பேர்,

1929 பாரசீகத்தில் மரித்தவர்கள் 2,000 பேர். சேதமான கட்டிடங்கள் 700.

1930 ஒஹியோவில் 95 பேர் இறந்தனர். 300 பேர் காய மடைந்தனர்.

1930 கல்கத்தா ஹாரிஸன் ரோடில் பல கட்டிடங்கள் வீழ்ந்து விட்டன.

1930 ஜான்ஸியில் பகுதி நகரம் அப்படியே பூமிக்குள் ஆழ்ந்து விட்டது.

1930 இத்தாலியில் 1504 பேர் மரணமடைந்தனர். 112 பேர் காய மடைந்தனர். 800 குழந்தைகள் அனாதைகளாயின

1930 பனாமாவில் பூகம்பம். பெருஞ்சேதமில்லை.

1930 தோவுஞ்சையில் முனிஸிபல் கட்டிடத்தில் ஒரு பாகம் விழுந்து விட்டது.

1930 பர்மாவில் 50 முறை அதிர்ந்து பல பர்மியர் வீடுகளிடிந்தன. மீனலாவில் பல செட்டியார் வீடுகளும் இரு பொங்கி மடங்களும் இடிந்தன. சிட்குயினில் ஒரு பெரிய புத்த உருவமும் பல வீடுகளும் இரண்டிரண்டாய்ப் பிளந்து விட்டன. லேட்படானில் ஒரு ஸ்கூலும், பல கட்டிடங்களும் நாசமாயின.

1930 நியூஜீலாந்திலும் மெக்ஸிகோவிலும் ஒரே சமயத்தில் அதிர்ந்து பல மரங்கள் நாசமாயின.

1930 மைமன்சிங்கில் பூமி யதிர்ந்து பல விளை நிலங்கள் பாழாயினவாம். மோஹல்பூரில் வெடிப்பொன்று பூமியிலுண்டாகி அது கிணறு போலாகி விட்டதாம்.

1930 அஸ்ஸாமில் அநேக பொதுக் கட்டிடங்களும் ஆபீஸ்களும் தந்திக்காரியாலயங்களும் பலவீடுகளும் இடிந்து போயின.

1930-ல் மீண்டும் பர்மா, செய்கோன் முதலிய இடங்களில் பூகம்பம். பல சேதம். (வீரகேசரி.)

தேசீய சுகம்.

திரு. சோமசுந்தரன் அவர்கள்.

தேசம் செழிப்பாக வாழவேண்டுமானால் தேசீய சுகம் (National Health.) நன்கு கவனிக்கப் பெறுதல்வேண்டும். தேசீயசுகமே தேசபலத்திற்கு அடிப்படை. தேக சுகமும் தேக பலமும் உடைய மக்கள் நிறைந்த தேசமே சிறந்த தேசமாகும். தற்காலத்தில் நமது தேச சுகம் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றது என்று கூறுதல் மிகையாகாது. வறுமையினாலும் அறியாமையினாலும் தேச சுகம் பெரிதும் பாழடைந்திருக்கிறது. மக்களிடம் பலஹீனமும் நோயும் மிகமலிந்துவிட்டன. கிராமங்களின் சுகாதாரமும் நகரங்களின் சுகாதாரமும் மிகக் கேவலமான நிலையில் இருக்கின்றன. சுகாதாரத்தை விருத்தி செய்தற்கும் தேச சுகத்தைக் காப்பாற்றுதற்கும் உரிய பழக்க வழக்கங்கள் நன்கு கவனிக்கப் பெறவில்லை. உடல்வளர்த்தலும், உடற்பயிற்சி செய்தலும் குறைவுபட்டிருக்கின்றன. நோய்வளர்த்தலும் குடற்பயிற்சி செய்தலுமே மலிந்துவருகின்றன. ஊர்கடோறும் தெருக்கள் கால்வைக்கமுடியாதபடி அவ்வளவு அசுத்தமாக இருக்கின்றன. தெருக்களைப் பொதுஜனங்கள் மலஜலம் கழிக்கும் பொதுக் கக்கூஸ்களாகவும், குப்பைகொட்டும் இடங்களாகவும் கருதி அசுத்தஞ்செய்வது தமக்குத் தாமே தீங்குசெய்துகொள்வதாகும். அசுத்தங்களிலிருந்து உண்டாகும் ஈ, கொசுகு, புழுக்கள் முதலியவை பலவகையான நோய்களை ஊர்முழுவதும் பரவச் செய்கின்றன. ஊரை அசுத்தமாக வைத்துக்கொள்ளுவதைப் போல் அறியாமை வேறு ஒன்றுமில்லை.

வீடுகளிலும் பெறும்பான்மையானவற்றில், தோட்டங்கள் மிக ஆபாசமான நிலையில் இருப்பது கண்கூடு. எங்கு அழுக்கு நிறைகிறதோ அங்கு புழுக்கள் குடிகொண்டு நோயைப் பரப்புகின்றன. என்பது சுகாதார சாஸ்திர நிபுணர்கள் கூற்று. வீடுகளிலும் சுத்தமாக இல்லாதவை பல உண்டு. வீடுகளில், வருடத்

திற்கு ஒருமுறைகூடத் தூசியடித்துச் சுத்தஞ்செய்யாத பாகங்கள் இருக்கின்றன. வீடுகளில் பலர் பாத்திரங்களை அசுத்தமாக வைத்திருக்கின்றனர். ஆகாரங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்ற நியதி எல்லாவீடுகளிலும் நன்கு கவனிக்கப் பெறுவதில்லை. நன்கு சுத்தஞ்செய்யாத பாத்திரங்களில் புதிய ஆகாரங்களை வைப்பதாலும், ஆகாரபாத்திரங்களை மூடாமல் திறந்துவைப்பதாலும் பல தீமைகள் உண்டாகின்றன. தெருவில் பால் தயிர் மோர் பலகாரங்கள் முதலியவற்றை மூடாமல்வைத்து விற்பதாலும், தூசி துப்பற்றவைகளும் படிந்து பலவிதக்கேடுகளைச் செய்கின்றன.

ஆகாரங்களை விற்பனைக்குத் தயார்செய்யும் பலகாரக கடைகள், சாப்பாட்டுக் கடைகளின் அசுத்தம் மிகவும் அதிகமாகும். பெரும்பான்மையான ஜனங்களின் உடல் நிலை கெடுவதற்குக் காரணம், கடைகளில் விற்கப்பெறும் அசுத்த ஆகாரமே யெனல் மிகையாகாது. இவ்வியாபாரக் கடைகளின் அடுக்குகள் மிகவும் ஆபாசமாகவும் துர்நாற்றமாகவும் இருத்தல் கண்கூடு. சாப்பிடும் இடம் நன்கு சுத்தஞ்செய்யப்பெறுவதில்லை. வெளி விற்பனைக்குத் தெருவில் பலகாரங்கள் வைத்திருக்கும் இடத்தில் நாள் முழுவதும் தூசிபடிந்து ஈயும் கொசுகும் மொய்த்து அப் பலகாரங்களைப் பெரிதும் விஷமாக்கிவிடுகின்றன. இவ்விஷபதார்த்தங்களையே குழந்தைகளும் குட்டிகளும் பிள்ளைகளும் பெரியவர்களும் ஏழைகளும் சுகாதாரமுறை தெரியாமல் வாங்கி உண்டு வயிற்றைக் கெடுத்துக்கொள்ளுகின்றனர். இப்பலகாரக் கடைக்காரர்கள் கடலை எண்ணெயில் செய்யும் பலவகையான மாப்பலகாரங்களும் வயிறுக்கு ஒவ்வாதனவே. வெறுஞ் சீனியையே மிகுதியாகக்கொண்டு மாக்களைச்சேர்த்துச் செய்யப் பெறும் இனிப்புப் பதார்த்தங்களும் உடலுக்குக் கேடு செய்வனவே. கடலை எண்ணெயைக் கொண்டு மாப்பலகாரங்கள் செய்து விற்கும் கடைகள் புதிதாகத் தோன்றிய அநாவசிய வியாபார நிலையங்களேயாகும். ஆவியில் வேகவைக்கப் பெறும் இட்டிலி தோசை புட்டு ஆப்பம் முதலிய பலகாரங்களை வீடுகளில் செய்து விற்கும் வியாபாரமுறை சாலச் சிறந்ததாகும்.

(தொடரும்)

கனகவல்லி

அல்லது

கள்வர் கவர்ந்த கன்னிகை.

கோவை. திரு. சி. கு. நாராயணஸ்வாமி முதலியார் அவர்கள்.

(சென்றமாதத் தொடர்ச்சி)

பொன்:— நல்லது கொண்டபல்லி கொடிய கள்வர்கள் நடமாடும் அபாயமானவழி. தாங்கள் தகுந்த துணையுடன் செல்ல வேண்டுமென்பதே எனதுவேண்டுகோள். வழிப்பறிக்கள்வர்களால் வகைமோசம் அதிகம் அதனால் கொடுந்துன்பங்கட்குப்பலர் ஆளாகி பொருள் நஷ்டத்திற்கும் கொலைக்கும் உள்ளாகி யிருக்கின்றனர். இவ்வளவும் நான் பலர் உரைக்கக் கேட்டது. அதனைத் தங்களுக்குக் கூறினேன். விவரம் அறியாதவர்களுக்கு விவரம் அறிவிக்க வேண்டுவது மனிதனாகப்பிறந்த ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமை. தாங்கள் அதற்கேற்றபடி நடந்துகொள்வீர்களென்றே நம்புகிறேன்.

ஆனந்:— தங்களது நற்குணத்திற்கும், உபகாரச் சிந்தைக்கும் மெத்த சந்தோஷம். கூடுமானவரை தக்கதுணையுடனே பிரயாணஞ்செய்கின்றேன். நானும், எனது வேலையாள் வேலனும், இந்த இரண்டு நாட்களாகச் சாப்பிட்டவகையில் ஏற்பட்ட கணக்கென்ன? விடுதி வாடகை, வென்னீர் ஸ்நானம், ஸபெஷல் சாப்பாடு ஆகியவைகளையும் ஒன்று சேர்த்து கணக்குச் சொல்லவும். நான் விடியற்கால நேரத்தில் செல்ல நிச்சயித்திருக்கிறேன். அப்பொழுது சௌகரியப்படாது என்றனன்.

பொன்:— கணக்கு விஷயத்தில் வரையறுத்து இன்னதுதான் கொடுக்கவேண்டுமென்று தங்கள் விஷயத்தில் கேட்க மனந்துணியவில்லை. தங்கள் யுக்தப்படி கொடுப்பதை சந்தோஷத்துடன் பெற்றுக்கொள்ளுகிறேன். தாங்கள் கொண்டபல்லியிலிருந்து திரும்பும்போது இங்குவந்து தங்கி உண்டு செல்லவேண்டு

மென்று கேட்டுக்கொண்டனள். ஆனந்தராஜா அப்படியே செய்கின்றேன் என்று வாக்களித்து உண்டுமுடிந்தெழுந்து கையலம்பிக்கொண்டு மடியிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்துக்கொடுத்தார். பொன்னம்மாள் பெற்றுச் சந்தோஷித்தனள். பின்னர் ராஜா தன் ஜாகைசென்று தாம்பூலம் போட்டுக்கொண்டு சிறிதுநேரம் சிறு நடைநடந்து, வேலனால் விரிக்கப்பட்டிருந்த படுக்கையிற் சென்று கண் வளர்ந்தனர். வேலனும் சென்று உணவுண்டுவந்து சாமான்களைக் கட்டித் தயார்செய்துவிட்டு தானும் படுத்துறங்கினான்.

ஆறும் அத்தியாயம்.

திரைமறைவும்—சதிச் செயலும்.

சாப்பாட்டு விடுதியில் தனியறையில் ஆனந்தராஜா உணவுண்டபடியேயிருந்து விடுதியின் தலைவி பொன்னம்மாளுடன் நிகழ்த்திய சம்பாஷணையைப் பிறர் அறியாதபடி கமலம் திரைமறைவில் ஒழிந்திருந்து உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தனள். இவள் விடுதியில் வேலைசெய்யும் பெண்களில் முதன்மையுடையவள். பரம துஷ்டை. சதிசெய்கின்ற தனது தொழிலுக்கு அநுகூலமானவார்த்தைகள் ராஜாவாயினின்றும் வெளிவருவதையே கவனமாய் உற்றுக்கொண்டிருந்தனள். அவள் எதிர்பார்த்தபடியே, 'ஆனந்தராஜா விடியற்காலத்தில் தனதுவேலைக்காரனுடன்கொண்டபல்லிக்குப்பிரயாணஞ்செய்துவருவதாக நிச்சயித்திருக்கிறேன்' என்று கூறியதே தனக்கு பெருலாபகரமான சங்கதியென்றுமனதிற்குள் பேரானந்தமடைந்து இவ்விஷயத்தை தன்னுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கும் கள்வர் தலைவனுக்கு அவர்கள் வசம் இருக்கும் பொருள்களைக் கவரச்செய்தும் அவர்கள் உயிருடன் வீட்டுக்குத் திரும்பிச்செல்ல இஷ்டப்பட்டால் ரூபாய் இரண்டாயிரம் ஒவ்வொருவருக்கும் விடுதலைப் பொருளாகக் கொடுக்கவேண்டுமென்ற ஓர் நிபந்தனையை ஏற்படுத்தும்படியும் ஆலோசனை சொல்லவும் தீர்மானித்துக்கொண்டு தலைவி பொன்னம்மாள் உணவுண்டு படுக்கைக்

குச் செல்லும்வரை காத்திருந்து அவள் அங்ஙனம் சென்றதும் தான் அந்தப்புரஞ்சென்று தன் கீழுள்ள வேலைக்காரர்களில் 'கோவிந்தன்' என்பவனை கோவிந்தா! என்று குரலெடுத்து அழைத்தனள். அவன் வாராமைகண்டு மடையன் படுத்துறங்குகின்றான்போலும் என்று கோபித்து தீபத்தைக் கையில் எடுதுக் கொண்டு அங்குள்ள அறைகளிலும் மூலைமுடுக்குகளிலும் சென்று தேடினள். அவன்காணப்படவில்லை. பின்னர் சமையல் அறையின் அடுப்பங்கரையின் ஓர் மூலையில் வெறுந்தரையில் தலைவிரிகோலமாய்ப் படுத்துறங்குகின்ற கோவிந்தனைக் கண்டு அவனைத்தட்டி எழுப்பினள். அவன் அவ்வறையில் தவறிப் படுத்தோமே என்று திடுக்கிட்டெழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு ஒருபுறமாய் ஒதுங்கிநின்றான். கமலம் அவனைப்பார்த்து அறிவிற் குறைந்த அசடே! உன்னை முன்னேரத்திலேயே இவ்வாறு படுத்துறங்க வேண்டாமென்று எத்தனைதரம் நான் சொல்லியிருந்தும் நீ கவனிக்கவில்லை. வேலைஅதிகமாகவிருக்கிற நாளிலேதான் உனக்குச் சமையல் அறையின் அடுப்புமூலையில் நித்திரைவருகிறதோ? அடே! என்று விளித்தாள்.ஏனென்றுகூட எதிர்வருவதற்குஇல்லாமல் நித்திராதேவியுடன் ரமிக்கின்றனை. அவ்வம்மையும் உன் விருப்பத்திற்கு அருள் சுரந்து உன்முகத்தின்மீது தாண்டவம் ஆடுகின்றனள். இருக்கட்டும் எல்லாவற்றையும் காலையில் விசாரித்துத் தக்கது செய்கின்றேன். என்று அவனை கடிந்துரைத்தனள். அவன் மிகப்பயந்து அம்மா! இனி இப்படிச்செய்வதில்லை. என்னை மன்னியுங்கள் என்று மிகவும் விநயவார்த்தை புகன்று........... இப்பொழுது ஏதேனும் வேலையிருந்தால் கட்டளையிடுங்கள் விரைவிற்செய்து முடிக்கின்றேன் என்று தாழ்மையாக வேண்டினன். கமலம் அவனை அருகிலழைத்து மெதுவாக அவன் செவியில் கள்ளத்தெருவிலுள்ள 'காத்தான்' என்பவனை நான் அழைத்துவரச் சொன்னதாகச் சொல்லி விரைவில் அழைத்துக்கொண்டுவா என்று கூறினள்—அவன் யார்? அக்கள்வர் கூட்டத் தலைவனையா? என்றனன். ஆம், அவனைத்தான் என்று கமலம் கூறினள். கோவிந்தன் மேல்வேஷ்டி ஒன்றை யெடுத்துத் தோள்மேல்போட்டுக் கொண்டு அவிழ்ந்து தொங்குகின்ற குடுமியைக்கூட முடிபோடாமல் வேகமாக நடந்துசென்று ஒரு நாழிக்குள், தடித்த உடலும்

இருண்ட நிறமும் நீண்ட வளர்த்தியுமுள்ள ஒரு முரட்டு மனிதனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டுவந்தான். அவன் வரவு கண்ட கமலம் சந்தோஷித்து அவனைப்பார்த்து க்ஷேமமா? நாலைந்து நாட்களாக இவ்வழியே வரக்காணோமே? வேலையதிகமா? என்று வினவினள். அவன் வேலையொன்றுமேயில்லை என்றனன். அவள் சரி உட்காரும் என்று சொல்லி ஓர் இடத்தைக் காட்டி அமர்த்திவிட்டு கோவிந்தனைப்பார்த்து, அடே! நீ சென்று தெருவாசற்கதவைச் சாத்தி நன்ருகத் தாளிட்டுவிட்டு நடைத் திண்ணையில் சென்று படுத்துக்கொள் என்று உத்திரவிட்டனள். அவனும் அப்படியே சென்றனன்.

கள்வர் தலைவனும், கமலமும் தனித்துட்கார்ந்து அடியில் வருமாறு சம்பாஷித்தனர்.

காத்தான்:— கமலத்தை நோக்கி ஏன் என்னை இவ்வளவு அவசரமாக அழைத்துவரச் சொன்னீர்கள்? ஏதேனும் விசேடம் உண்டா? என்றனன்.

கமலம்:— விசேஷமில்லாமல் அழைத்துவரச் சொல்வேனு?

காத்:— சந்தோஷம். கொழுத்தவேட்டையா? சாதாரணமா? விவரம் அறியவிரும்புகிறேன்.

கம:— முதல்தரமான பணவேட்டை. நல்ல அதிர்ஷ்டம். ஏராளமான பொருள்கிடைக்கும்.

காத்:— அத்தகைய பேர்வழியார்? அவர்பெயர் தெரியுமா? தெரிந்தால் நல்லது.

கம:— கோலகொண்டா நவாப்பின் யுத்தகாரியாலயத்தின் பிரதான காரியஸ்தர். அழகிரிராஜா என்பது அவர்பெயர்.

காத்:— நான் அவர் பெயரைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆளை நேரில் பார்த்ததில்லை. அவர் பெரும் பிரபுவென்றும் கோலகொண்டாவிலுள்ள செல்வர்களில் அவர் தான் முதன்மையுடையவர் என்றும் நவாப்பிடத்தில் அவர்க்கு அதிக செல்வாக்குண்

விகடத் துணுக்குகள்.

கோபாலன்:— ராமா! கோதுமைமாவு விலை ஏறிவிட்டதாமி லோ, ஏன்?

ராமன்:— அது தெரியாதாப்பா! முன்னர் தாசிகள் மைனர்கள் தங்களைக்கண்டு மயங்கிவருவதற்காக முகத்தில் கொஞ்சம் வாங்கிப் பூசிவந்தார்கள். இப்பொழுதைய நாகரீககாலத்தில் குடும்பஸ்திரீகளெல்லாம் அதை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டதால்.

ஃ ஃ ஃ

க:— என்ன ஓய்! திரேகம் மிகவும் பருத்துவிட்டதே?

ந:— ஆ! சந்தாதாரிடம் சந்தா வசூலிக்க இன்னம் 10 தடவை அலைந்தால் இன்னும் பருக்காதா? பருக்கும்.

ஃ ஃ ஃ

ஏஜண்டு:— ஐயா! நமது பத்திரிகைக்குத் தாங்கள் ஓர் சந்தா கொடுக்கப்பிடாதா?

ஐயா:— செட்டியார் கொடுத்த சந்தா நான் கொடுத்தமாதிரி தான். நான் அதைத் தடுத்துவிட்டால் அது உமக்குக் கிடைக்காதல்லவா? எனவே நான் அவ்வாறு சொல்லாது கொடுத்தது நல்லதுதானே.

ஃ ஃ ஃ

தகப்பன்:— எண்டாபையா! காக்கை நெல்லை இறைக்கும் பார்த்துக்கொள் என்றேனே கவனமாய்ப் பார்த்தாயா?

பையன்:— ஆமப்பா! பார்த்தேன். சற்று முன்தான் 50 காக்கைகள் கூடி ஒன்றாய் இறைத்தன. தாங்கள் சொற்படியே பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஃ ஃ ஃ

உபாத்தியாயர்:— அடே முத்தா! ஒரு மைல் எத்தனை கெஜ நீளமுள்ளதப்பா?

முத்தன்:— பெரிய மைலாகவிருந்தால் வாலுள்பட இரண்டு கஜ மிருக்குஞ்சார்.

ஃ ஃ ஃ

புருஷன்:— மனைவி! நீ வரவர வியபசாரஞ்செய்வது முற்றி விட்டதாமிலோ! இது குற்றமில்லையா?

மனைவி:— இது என்குற்றமில்லை. தாங்கள் வாங்கிக்கொடுத்த அறக்கை ரவுக்கையும் சைனு சில்க்குட்டையும் பாரிஸ் செண்டும் லண்டன் மூக்குக் கண்ணாடியுமே அவ்வாறு செய்கிறது.

ஃ ஃ ஃ

விகடன்:— ஓய் சாமியாரே! நீர் என் ஒரே தாசியை வைத்துக் கொள்ளாமல் மாதம் இரண்டுபேரைப் பிடிக்கிறீர்?

சாமியார்:— விகடரே! எம்மிடமுள்ள பணம் பல தர்மவான்கள் சேர்த்தபணமாதலால் ஒரு தாசிக்கே கொடுக்கக்கூடாதெனப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுக்கிறேன்.

ஃ ஃ ஃ

வேணு:— நம்மள் எஜமான் ஒருவியாதியுமில்லாமல் சடாரென சிறுவயதிலேயே இறந்துவிட்டாரே ஏன்?

பானு:— அதையேப்பாகேட்கிருய்? நம்மள் வீட்டுக் கணக்கு வேலைபார்க்கும் ஐயர் சதா திண்ணையில் உட்கார்ந்துகொண்டு யார் வந்தாலும் எஜமான் இல்லை இல்லை. என்ருரல்லவா? அந்த வாக்குப் பலித்துவிட்டது.

ஃ ஃ ஃ

வாத்தியார்:— கந்தா, நீ எப்பொழுது ஆலயத்திற்குச் செல்லுவாய்?

கந்தன்:— என்றைக்குப் பிரஸாதம் ஜாஸ்தியாகக் கொடுப்பார்களென்று தெரிகிறதோ அன்றையதினம் தான்.

ஃ ஃ ஃ

இன்ஸ்பெக்டர்:— பையா! உனக்குத்தெரிந்ததில் அதிசயமானது ஒன்று சொல் பார்க்கலாம்.

பையன்:— பலவிடங்களில். மனைவியைக் கணவன் அடித்துப் பார்த்திருக்கிறேன். ஆனல் எங்க வாத்தியாரை, அவர் மனைவியடிப்பது தான் ஆச்சரியம். அதிசயம்.

மின்மினி.

விவாக ரத்து

சுமார் 20 லக்ஷம் அமெரிக்க ஸ்திரீகள் புருஷர்களால் விவாக ரத்துச் செய்யப்பட்டு அவர்களளிக்கும் ஜீவனும்சத்தைக்கொண்டு பிழைக்கின்றனராம். இந்தத் தொகை 15 கோடிப் பொன்னுக்கு மேல் உயர்ந்துகொண்டே போகிறதாம்.

பெரும் உதவி.

பத்திரிகைகள் ரெயில் வண்டிகளில் பிரயாணஞ் செய்யும் சமயத்தில் வீண் பேச்சு நிகழாமல் இருக்கப் பேருதவியாயிருக்கின்றன. என்று டீன் இன்ஞ் என்பார் கூறுகிறாராம்.

விநோத வழக்கு.

தன் நாய்களைக் கவனிப்பதில்லை என லேடி ஈவ்ஸ் என்பவள் ஆவ்ரிஸ் நகர கோர்ட்டில் தன் கணவன்மீது விவாகரத்து வழக்குத் தொடர்ந்தாளாம்.

சைக்கிள் பிரயாணம்.

1924-ம் ஆண்டு பம்பாயிலிருந்து புறப்பட்ட தேவர் என்ற பாரசீக இளைஞரும் வியன்னுவைச் சேர்ந்த ஸ்டவ் ஜானிக் என்பவரும் இதுவரை 62,000 மைல் பிரயாணம் செய்து இரங்கூனுக்குப் போயிருக்கின்றனராம்.

ஓர் தர்மம்.

வட்டமேஜை மகாநாட்டுத் திறப்புவிழாவின்போது அரசர் பேசிய பேச்சுக்களின் கிராமபோன் ரிக்கார்டுகள் விற்பனையின் இலாபத்தில் ஒரு தொகையை லேடி மிண்டோ இந்திய நர்ஸிங் அசோஸியேஷனுக்குக் கொடுக்கவேண்டுமென அரசர் விரும்புகிறாராம்.

விபசார விடுதி.

நியூயார்க்கில் உள்ள ஒரு ஸ்திரீ வியபசார விடுதியொன்றை போலீசாருக்குத் தெரியாமல் வைத்துக்கொண்டு அதிலிருந்து ஒரே ஆண்டில் 20,000 பவுன்கள் சம்பாதித்தாளாம். ஒவ்வொரு பெண்ணுக்கும் அந்த ஸ்திரீ 2 பவுன்கள் கமிஷனைச் சம்பாதிப்பது வழக்கமாம். போலீசார் விஷயமறிந்து அந்த மாதைக் கைதுசெய்துவிட்டனர். சென்னையில் இதுபோன்ற அநேக விடுதிகளிருந்தும் போலீசார் ஏன் இதில் அக்கரை காட்டுவதில்லை யென்பது விளங்கவில்லை.

மரணதண்டனை ஒழிந்தது.

டேனிஷ் பார்லிமெண்டில் மரணதண்டனை விதிக்கும் வழக்கத்தை டென்மார்கினின்று ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானம் நிரைவேற்றப்பட்டுவிட்டதாம்.

74 பெரியார்.

1929-30-ம் ஆண்டுகளில் பஞ்சாப் மாகாணத்தில் போலீஸ் சிறை இலாக்காக்களைச் சேர்ந்த 74 உத்தியோகஸ்தர்கள் குற்றவாளிகளைக் கற்பழித்த காரணத்தினால் வேலையினின்று நீக்கப்பட்டும் தண்டனை விதிக்கப்பட்டும் இருக்கின்றனராம்.

180 வயதுப் பெரியார்.

வங்காளத்துப் பெரியாரான காலஞ்சென்ற ராஜாராம்மோகனராய் காலத்திலிருந்த பெரிய சாதுவான பரமஹம்ச தீபத்திபாபா பரத்வானில் சென்ற வாரத்தில் காலஞ்சென்றார். அவருக்கு வயது 180. இவர் தீபத்திலேயே நெடுங்காலம் வாழ்ந்திருந்தாராம். இவர் சீயம் முதலிய வெளி நாடுகளுக்கு சென்றிருக்கின்றாராம்.

ஆண் குழந்தையா? பெண் குழந்தையா?

தாய் வயிற்றில் இருப்பது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? என்று கர்பத்திலிருக்கும்போதே கூறிவிட இந்தியாவிலும் பலமுறைகள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் நேப்பிள்ஸில் டாக்டர் கொனுக்ஸி என்னும் இத்தாலியர் சிறிய மின்சாரக் கருவியொன்று கண்டுபிடித்திருக்கிறார். அக்கருவியின் இயக்கம் ஆணாயிருந்தால் ஒருவாறும் பெண்ணாயிருந்தால் ஒருவாறும் இருக்கிறதாம். எனவே அக்கருவியில் இன்னம் பல சீர்திருத்தங்கள் செய்து கர்ப்பவதியின் கையில் கொடுத்து அதைப்பிடித்திருக்கச் சொல்லிவிட்டு, அதன் மூலம் வயிற்றிலிருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்று கூறிவிடக்கூடுமாம்.

மதிப்புரை.

'இந்தியமித்திரன்' ஈப்போ.

இதன் இதழ்கள் தொடர்ச்சியாக நமது பார்வைக்கு வருகின்றன. இது மலாய் நாட்டின் மத்தியிலுள்ள ஈப்போ நகரிலிருந்து கடந்த இரண்டாண்டுகளாக வெளிவரும் ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை. நடுநிலைமையில் பல்வேறு பிரமுகர்களின் உயரிய கட்டுரைகளும் இராஜீய தேசியக் குறிப்புகளுந்தாங்கி ஆசிரியர் திரு. B. வேணுகோபாலன் அவர்கள் தலைமையில் மிகத்திறமையாக நடத்தப்படுகின்றது. இதன் வருட சந்தா மலேயாவிற்கு $ 4.00. இந்தியா, பர்மா, சிலோன், $ 5.00 மலேயாவிலுள்ள இந்தியர் யாவரும் இதை ஏந்திப்படித்து ஆதரவு நல்க வேண்டுவது அவசியம். மலேய விஷயங்களறிய வேண்டித் தமிழ் நாட்டவரும் இதற்கு நல்லாதரவு நல்குவரென எதிர்பார்க்கிறோம். விலாசம் மானேஜர், 'இந்திய மித்திரன்', 87, பெல்பீல்ட் ஸ்ரீட், ஈப்போ.

'தனவணிகன்' கோட்டையூர்.

இதன் முதல் மலரின் முதலிதழ் வரப்பெற்றோம். இது சென்னையை வாஸஸ்தலமாயும் பள்ளத்தூரைப் பிறப்பகமாயும் பெற்றுள்ள அட்வகேட் திரு. K. இராமனாதஞ் செட்டியார், B. A. B. L., அவர்களைத் தலைவராகவும் கோட்டையூர் திரு. கருப்பஞ் செட்டியாரவர்களை நிர்வாகஸ்தராகவும் திருவாளர்களான K. V. A. L. அழகப்ப செட்டியாரவர்கள், B. A., V. R. M. செட்டியாரவர்கள், B. A., அரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள். ராம. ராமனாதன் அவர்கள், வி. ஜி. நாயர் அவர்களைத் துணைவர்களாகவுங்கொண்ட ஆசிரியர் கழகத்தாரால் நடுநிலைமையில் பொதுவாகத் தேசநலங்கருதியுஞ் சிறப்பாகத் தனவணிகர் சமூக நலங்கருதியும் உயர்ந்த பல அறிஞர்களின் செந்தமிழ்க்கட்டுரைகளோடு கிளேஸ்காகிதத்தில் வெளியிடப்படும் மாதசஞ்சிகை. இதில் இரண்டு ஆப்டோன் படங்களும் திகழுகின்றன. இதன் வருட சந்தா உள்நாடு ரூபாய் இரண்டும் வெளிநாடு ரூபாய் இரண்டரையும் ஆகும். பொதுவாகத் தமிழரும் சிறப்பாகச் செட்டியார்களும் இதை ஆதரிக்கவேண்டுகிறோம். விலாசம் மானேஜர், 'தனவணிகன்' கோட்டையூர், இராமநாதபுரம் ஜில்லா.

நாற்றிசை நடப்பு.

மாளவியாஜீயின் விடுதலை.

தேக அசௌகர்யங் காரணமாக யாதொரு நிபந்தனையுமின்றி பண்டித மதன்மோகன் மாளவியாஜீ விடுதலை செய்யப்பெற்று தன்னூருக்குச் சென்றார்.

மஹாகவி.

இந்திய மஹாகவி ரவீந்திரநாததாகூர் அமெரிக்காவிலிருந்து லண்டன் வந்து சேர்ந்தார். அமெரிக்காவில் கடாசியாய் அவர் மஹாத்மா காந்தியைப்பற்றி அபிப்பிராயம் வெளியிட்டபோது மஹாத்மனின் உறுதியான நம்பிக்கையையே நான் நம்புவேன்! எனது சந்தேகங்களை நான் நம்ப விரும்பமாட்டேன்! என்று பத்திரிகைகளுக்கு அறிவித்தாராம்.

கன்னக்களவு.

பள்ளத்தூர் சு. சொ. சித. அழ. அழகப்ப செட்டியார் வீட்டில் சில திருடர்கள் மோட்டின் வழி ஏறி உள்ளிறங்கி மச்சில் கன்னம் வைத்து அறைக்குள்ளிருந்த இரும்புப்பெட்டியிலுள்ள சுமார் 5000 ரூபாய் மதிப்புள்ள நகை, சேலை, வேஷ்டி, வகையறாக்களைத் திருடிச் சென்றார்களாம். போலீசார் அதுபற்றி விசாரணை நடத்திவருவதாகத் தெரிகிறது.

செவிடு, ஊமை, பள்ளிக்கூடம்.

திவான்பஹதூர் சோமசுந்தரன் செட்டியார் செவிடு, ஊமை குழந்தைகளின் பள்ளிக்கூடம் சென்னையிலிருந்து 17—10—30ல் தேவகோட்டைக்கு கொண்டுவரப்பெற்று இப்பொழுது கருதா ஊரணி கீழ்கரைப் பக்கமுள்ள மெ. அவர்கள பழைய வீட்டில் நடைபெற்று வருகிறது. பேசச் செய்விப்பதுடன் எழுத, படிக்க கணக்குச்செய்ய, திரேகாப்பியாசஞ் செய்ய கற்றுக்கொடுக்கப்படுகிறது. குழந்தைகள் ஜாதி வித்தியாசமன்னியில் ஆண் பெண் யாவருஞ்சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஏழைகளுக்கு உடை உணவும், உறைவிடமும், ஆகிய யாவும் இனம். வேறு வேண்டிய தகவல்களுக்கு இப்பள்ளிக்கூட சூப்ரிண்டெண்டுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

வெள்ளச் சேதம்.

சமீபத்தில் தென் இந்தியாவில் ஏற்பட்ட வெள்ளச்சேதம் இரண்டுகோடி ரூபாய்களாம்.

மாஜி இந்தியா சட்டசபைத் தலைவர்

விட்டல்பாய் படேல் அவர்கள் சிறைசென்றது முதல் வயிற்றில் வலி இருப்பதாகச்சொல்லுகிறாராம். அந்த நோய் இன்னதெனத் தெரியவில்லையாம். நிறையில் வாராவாரம் குறைந்து வருகிறாராம். அதற்காகக் கோயமுத்தூர் சிறையில் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள்.

லங்காஷயருக்கு ஏற்ற பஞ்சு.

லங்காஷயர் உபயோகத்திற்காக பதினேழு லக்ஷத்து ஐம்பதினுயிரம் பேல் பஞ்சு இந்தியாவில் உற்பத்தியாகிறதாம்.

கல்லுக்கட்டியில் தீவிபத்து.

கல்லுக்கட்டியின் வடமேற்கு மூலையிலுள்ள பழக்கடைகள் யாவும் 30—11—30ல தீக்கிறையாயின. அச்சமயம் அதன் பக்கத்திலுள்ள கட்டிடங்களிலும் தீப்பரவியபோதிலும் நெருப்பணைக்கும் வண்டி வந்து நெருப்பை அணைத்ததாம். ஆனால் இன்னுங் கொஞ்சம் முன்னரே அவ்வண்டி வந்திருக்குமானால் நலமாகவிருந்திருக்கும். தாமதத்திற்குக் காரணம் டிரைவரிடம் சாவி இல்லையாம்.

ஸ்ரீமணிலால் கோத்தாரி.

1864ம் வருட அன்னியர் சட்டப்படி ஸ்ரீமணிலால் கோத்தாரியை சபர்மதி சிறையிலிருந்து வார்த்வான் சமஸ்தானத்திற்கு கொண்டுபோய் விட்டுவிட்டார்களாம். அதாவது பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டாராம்.

பஹிஷ்கார வெற்றி.

பம்பாய் சீமைத்துணி வியாபாரிகள் சங்கக்காரியதரிசி வெளியிட்டுள்ள அறிக்கையில் 1930 வருடம் அக்டோபர் மாதத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் நடந்த வியாபாரத்தையும் இப்பொழுதைய வியாபாரத்தயும் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது இறக்குமதியில் 794 லக்ஷம் ரூபாயும் மறு ஏற்றுமதியில் 18 லக்ஷ ரூபாயும் குறைந்துவிட்டதென்றும் ஏப்ரல் முதல் அக்டோபர் முடியவுள்ள ஏழு மாதத்தில் ஒப்பிடும் பொழுது இறக்குமதியில் 3986 லக்ஷம் ரூபாயும் ஏற்றுமதியில் 4204 லக்ஷம் ரூபாயும் மறு ஏற்றுமதியில் 430 லக்ஷம் ரூபாயும் குறைந்துவிட்டதென்றும் கூறுகிறார்.